**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 36/2016**

**Deposition of Witness for : PW.1**

**Name** : திருமதி. கல்பனா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-12-2020.**

முதல் விசாரணை.

நான் ரா.அகரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். சாட்சி சிவபாக்கியம் எனது மாமியார். பூமிநாதன் என்னுடைய நாத்தனாரின் கணவர். சாட்சி ஏழுமலை என் மாமனார். 1 மற்றும் 2 எதிரிகள் எனது பெரிய மாமனாரின் மகன்கள். 3ம் எதிரி என் பெரிய மாமனாரின் மருமகன், 6ம் எதிரி எனது பெரிய மாமனார். 4ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி, 5 எதிரி 2ம் எதிரியின் மனைவி, 3ம் எதிரி மனைவி 7ம் எதிரி. எதிரிகளுக்கும் எங்களுக்கும் சம்பவத்திற்கு 1 ஆண்டிற்கு முன்பே சொத்து பிரச்சனை இருந்து வந்தது. 5.1.2015ம் நேதி என்னுடைய கணவர், மாமனார், மாமியார், என்னுடைய மகன்கள் சதீஷ் மற்றும் ராஜா ஆகியோர் இரவு 10 மணி அளவில் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது 1ம் எதிரி தேவிடியா பையா வெளியே வாடா, நீ இருந்தா தான்னே கோர்டுக்கும்,பஞ்சாயத்துக்கும் போவாய், உன்னை வெட்டிப் போட்டால் தான் சரி ஆகும் என்று சொல்லி சத்தம் போட்டார். அப்போது என் கணவர் வீட்டிற்கு வெளியே வந்து பிரச்சனை வேண்டாம் கோர்டில் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிக் கொள்டு அறிவாளால் என் கணவரின் பின் மண்டையில் 1ம் எதிரி வெட்டினார். உடனே 2 மற்றும் 3 எதிரிகள் தடியை எடுத்துக் கொண்டு என் கணவரின் தொடையில் மாறி மாறி அடித்தார்கள். 4ம் எதிரி என் கணவரின் தாடையில் மாறி மாறி அடித்தார். நான் தடுக்க சென்றேன். அப்போது 7ம் எதிரி மற்றும் 5 எதிரியும் என் தலைமுடியை பிடித்து குமுக்கி என்னை அடித்து கீழே தள்ளி விட்டார்கள். 6ம் எதிரி என் முடியை பிடித்து என்னையும் என் கணவரையும் காலால் எட்டி உதைத்தார். அதனால் நானும் என் கணவரும் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டோம். உடனே ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அன்று இரவு 11 மணியளவில் சேர்க்கப்பட்டோம். எங்களுடன் சேட்டு, பூமிநாதன் என் மாமியார் உடன்

Sd/- கல்பனா

வந்தார்கள். என் கணவருக்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்ததால் என் கணவரை வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு மருத்துவர்கள் கூறினார். காலை 12 மணியளவில் நாங்கள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு உள்ளே எடுத்து செல்லும் போது என் கணவர் இறந்து விட்டார். போலீசார் என்னை திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சம்பவ தினத்தன்றே விசாரணை செய்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் அதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ. 1. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அருவாள் என் கணவரை 1ம் எதிரி வெட்டினார். அந்த அருவாள் சா.பொ. 1. 2 மற்றும் 3 எதிரிகள் பயன் படுத்திய உருட்டுக் கட்டை சா.பொ.2 மற்றும் 3.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- கல்பனா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 36/2016</u>**

**<u>Deposition of Witness for : PW.2</u>**

**Name** : திருமதி. சிவபாக்கியம்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-12-2020.**

<u>முதல் விசாரணை.</u>

நான் ரா.அகரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். அ.சா.1 எனது மருமகள். 1ம் எதிரிகள் என் மூத்தாரின் பிள்ளைகள். 3ம் எதிரி என் நாத்தனாரின் மகன். 6ம் எதிரி என் மூத்தார். 5ம் எதிரி 2ம் எதிரியின் மனைவி. 7ம் எதிரி 3ம் எதிரியின் மனைவி. 4ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி. எனக்கு பரசுராமன் என்ற மகனும், தவமணி என்ற மகளும் உள்ளனர். பரசுராமனுக்கு அ.சா.1 ஐ திருமணம் செய்து அவர்களுக்கு சதீஷ், ராஜா என இரண்டு மகன்கள் உள்ளனர். எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலத்து பிரச்சனை ரொம்ப நாட்களாக இருந்து வந்தது. என் மகன் பரசுராமன் எதிரிகளிடம் பிரச்சனைகள் வேண்டாம் என்றும், எதுவாக இருந்தாலும் கோர்டில் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறினார். 5.1.2015ம் தேதி இரவு 10 மணியளவில் நாங்கள் அனைவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு இருந்தோம். அப்போது 1ம் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து வாடா தேவிடியா பையா இன்றோடு உன்னை முடித்து விடுகிறேன் என்று கூறினார். நீ இருந்தால் தானே கோர்டுக்கு போவாய் இன்றோடு உன் கதையை முடித்து விடுகிறேன் என்று சத்தம் போட்டார். அப்போது நாங்கள் அனைவரும் வீட்டிற்கு வெளியே வந்தோம். என் மகன் பரசுராமன் கோர்டில் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறினார் அப்போது 1ம் எதிரி என் மகனை கொடுவாளால் பின்னந் தலையில் வெட்டினார். பின்னர் 2 மற்றும் 3 எதிரிகள் உருட்டுக் கட்டையால் மாறி மாறி என் மகனின் தொடையில் அடித்தார்கள். 4ம் எதிரி என் மகனின் இரண்டு தாடையிலும் மாறி மாறி கையால் அடித்தார். அப்போது என் மருமகள் அ.சா.1 தடுக்க வந்தார் அப்போது 4,5 மற்றும் 7 எதிரிகள் என் மருமகளையும் தலைமுடியை பிடித்து அடித்து கீழே தள்ளினார்கள். பிறகு 6ம் எதிரி என் மருமகளையும், மகனையும் காலால் எட்டி உதைத்தார். என் மகனும், மருமகளும் மயங்கி கீழே விழுந்து விட்டார்கள். பின்னர் என் மருமகளை தண்ணீர் தெளித்து எழுப்பி 108 ஆம்புலன்ஸ் மூலம் இரவு 11 மணியளவில் நானும்,

Sd/- சிவபாக்கியம்

என் கணவர், சேட்டு, ஏழுமலை ஆகியோர்கள் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அன்று இரவு முழுவதும் திருவண்ணாமவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது. பின்னர் என் மகனை பார்க்க முடியாது என்றும் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு மருத்துவர்கள் கூறினார்கள். மறுநாள் 6ம் தேதி மதியம் 12 25 மணியளவில் என் மகன் இறந்து விட்டதாக மருத்துவமனையில் கூறினார்கள். சம்பவம் நடந்த அன்றே தண்டராம்பட்டு போலீசார் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். அவரிடம் அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1ஐ கொண்டு தான் சம்பவத்தன்று 1ம் எதிரி என் மகனை பின் தலையில் வெட்டினார். சா.பொ. 2 மற்றும் 3ஐ கொண்டு 2 மற்றும் 3 எதிரிகள் என் மகனின் தொடையில் தாக்கினார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- சிவபாக்கியம்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 36/2016**

**Deposition of Witness for : PW.3**

**Name** : திரு. பூமிநாதன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-12-2020.**

முதல் விசாரணை.

நான் ரா.அகரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 என் மைத்துனர் பரசுராமனின் மனைவி. அ.சா.2 என் மாமியார். சாட்சி ஏழுமலை எனது மாமனார். 1, 2 எதிரிகள் எனது மச்சான். 3ம் எதிரி எனது சகலை. 4ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி, 5 எதிரி 2எதிரியின் மனைவி, 6ம் எதிரி என்னுடைய மாமனார். 7ம் எதிரி 3ம் எதிரியின் மனைவி. என் மனைவி பெயர் தவமணி. அ.சா.1ன் வீடும் எனது வீடு பக்கத்து தெருவில் உள்ளது. இறந்து போன பரசுராமன் எனது மைத்துனர். அவருடைய அக்காவை நான் திருமணம் செய்துள்ளேன். கடந்த 5.1.2015ந் தேதி இரவு 10 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அ.சா.1ன் வீட்டில் இருந்து சத்தம் வந்தது. சத்தம் கேட்டு நான் ஓடினேன். அப்போது 1ம் எதிரி வேலு பரசுராமனை அருவாளால் பின் மண்டையில் வெட்டினார். 2 மற்றும் 3ம் எதிரி உருட்டுக் கட்டையால் பரசுராமனின் தொடையில் மாறி மாறி அடித்தார்கள். 5 மற்றும் 7 எதிரிகள் அ.சா.1ன் தலைமுடியை பிடித்து அடித்தார்கள். 4ம் எதிரி பரசுராமனின் தாடையில் மாறி மாறி அடித்தார். 6ம் எதிரி பரசுராமனை காலால் எட்டி உதைத்தார். 7ம் எதிரி அ.சா.1 ன் முடியை பிடித்து அடித்தார். அதனால் பரசுராமனும், அ.சா.1ம் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்கள். பிறகு ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி வரவழைத்து நானும், அ.சா.2, சேட்டு ஆகியோர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு இரவு சுமார் 11 மணியளவில் கொண்டு வந்து சேர்த்தோம். பிறகு தண்டராம்பட்டு போலீசார் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு வந்து அ.சா.1 டம் வாக்குமூலம் பெற்றனர். அன்று இரவு மருத்துவமனையில் அ.சா.1 மற்றும் பரசுராமனுக்கு சிகிச்சை அளித்தனர். மறுநாள் காலை பரசுராமனை மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு மருத்துவர்கள் கூறினார்கள். அதனால் நாங்கள் பரசுராமனை பகல் சுமார்

Sd/- பூமிநாதன்

12 மணியளவில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு உள்ளே செல்லும் போதே பரசுராமன் இறந்து விட்டார். பிறகு பரசுராமனின் உடலை பிரேத பரிசோதனை செய்து எங்களிடம் ஒப்படைத்தனர். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 முதல் 3 வரையான பொருட்களை சம்பவ இடத்தில் பார்த்தேன். சர்.பொ.1 ஐ கொண்டு 1ம் எதிரி பரசுராமனை வெட்டினார். சா.பொ. 2 மற்றும் 3 ல் 2, 3 எதிரிகள் பரசுராமனை தொடையில் தாக்கினார்கள். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- பூமிநாதன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 36/2016**

**Deposition of Witness for : PW.4**

**Name** : திரு. ஏழுமலை
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-12-2020.**

முதல் விசாரணை.

நான் ரா.அகரம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 என் மருமகள், அ.சா.2 என் மனைவி. அ.சா.3 என் மருமகன். எனக்கு பரசுராமன் என்ற மகனும், தவமணி என்ற மகளும் உள்ளனா். 1, 2 எதிரிகள் என் அண்ணனின் மகன்கள், 3ம் எதிரி என் அக்கா மகன், 4, 5 எதிரிகள் என் அண்ணன் 6ம் எதிரி பச்சையப்பனின் மருமகள்கள். 6ம் எதிரி என் அண்ணன். 7ம் எதிரி என் அண்ணன் மகள். எனக்கும் 6ம் எதிரிக்கும் நிலப்பிரச்சனை இருந்து வந்தது. 5.1.2015ம் தேதி இரவு சுமாா் 9.30 மணியளவில் நாங்கள் அனைவரும் எங்கள் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து என் மகனை வாடா வெளியே என்று அழைத்தாா்கள். என் மகனை நிலத்தகராறு சம்மந்தமாக அழைத்தாா்கள். அப்போது என் மகன் கோா்ட்டில் பாா்த்துக் கொள்ளலாம் என்று கூறினாா். அப்போது 1ம் எதிரி நீ இருந்தால் தானே கோா்டுக்கு போவாய் தேவிடியா பையா என் கூறி என் மகன் பரசுராமனின் பின் மண்டையில் வெட்டினாா். 2 மற்றும் 3 எதிரிகள் உருட்டுக்கட்டையால் என் மகனின் தொடையில் மாறி மாறி அடித்தாா்கள். 4ம் எதிரி என் மகனின் கண்ணத்தில் மாறி மாறி அடித்தாா். 5 மற்றும் 7ம் எதிரிகள் என் மருமகளை கீழே தள்ளி மூச்சு இல்லாத படி அடித்து விட்டாா்கள். எனது அண்ணன் பச்சையப்பன் 6ம் எதிரி என் மகன் மற்றும் மருமகளை காலால் உதைத்தாா். என் மகன் ரத்த வெள்ளத்தில் அந்த இடத்திலேயே விழுந்து விட்டாா். இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சோ்த்தோம். மறுநாள் 6ம் தேதி பகல் 12 மணியளவில் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் என் மகன் இறந்து விட்டாா். போலீசாா் அ.சா.1 டம் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் புகாா்

Sd/- ஏழுமலை

வாக்குமூலம் பெற்றனர். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 முதல் 3 வரை என் மகனை எதிரிகள் தாக்கும் போது பார்த்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- ஏழுமலை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.